**O.S. No.   240 /2019**

**Date:10.02 .2026**

**பி.வா.சா. 2 அன்னமரியாள்**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது அண்ணன் எனக்கு சொத்தில் பங்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். நானும், எனது அண்ணனும் சேர்ந்து தான் இந்த வழக்கை நடத்துகிறோம் என்றால் சரிதான். சொத்து எந்த எந்த ஊரில் உள்ளது என்றால் இலந்தைகுளத்தில் மட்டும் தான் உள்ளது. எனது அப்பா பெயர் ஆபிரகாம். எனது அம்மா பெயர் அம்பாயி. எனது தாத்தா பெயர் யோசேப்பு . யோசேப்பு மகன் ஆபிரகாம் என்றால் எனது அப்பா தான். வாதி எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இந்த வழக்கை தாக்கல் செய்யும் முன்பாக ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேன். மேற்படி பதில் அறிவிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவுடன் பிறந்தவர் துரைராஜ். துரைராஜ் மகன் பெயர் கோவில் பிள்ளை என்றால் சரிதான். எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் வருடம் ஞாபகம் இல்லை. எனக்கு திருமணம் செய்து கொடுத்து 2 வருடம் கழித்து எனது தந்தை இறந்துவிட்டார். எனது அம்மா 2011ல் இறந்தார் என்றால் சரிதான். என்னை எந்த ஊரில் திருமணம் செய்துகொடுத்தார்கள் என்றால் தடியாபுரம். எனக்கு திருமணம் நடைபெற்ற காலமுதல் அங்கு தான் வசித்து வருகிறேனா என்றால் நான் அங்கேயும் இருப்பேன், இலந்தைகுளத்திலும் இருப்பேன். வாதி எனது அண்ணன் பொறியாளராக பணிபுரிந்து வந்தாரா என்றால் சரிதான். மேற்படி எனது அண்ணன் வெளியூரில் தான் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான் விடுமுறைக்கு ஊருக்கு வந்து செல்வார். எனது தம்பி ஆபிரகாம் 1ம் பிரதிவாதி ஊரில் இருந்து தான் வேலைக்கு சென்றாரா என்றால் வெளியூரில் பணிபுரிந்து வந்தார் அவ்வபோது ஊருக்கு வந்துசெல்வார். ஆபிரகாம் சென்னையில் பணிபுரிந்து வந்தார்,. பின்பு திருநெல்வேலியிலும் பணிபுரிந்து வந்தார். மேற்படி

சொத்துக்களில் விவசாயம் செய்தது யார் என்றால் நாங்கள் மூன்று பேரும் பார்த்துக்கொள்வோம் . நாங்கள் மேற்படி சொத்துக்களில் என்ன என்ன பயிர் செய்தோம் என்றால் பருத்தி, உளுந்து, கடலை ஆகியவற்றை தடியாபுரத்தில் இருந்து வந்து பயிர் செய்து வந்தேன். எந்த எந்த சர்வே எண்ணில் பயிர் செய்து வந்தோம் என்றால் எந்த சர்வே நம்பர் என்று எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் செய்யப்பட்ட காலகட்டத்திலேயே நகைகள் போட்டுதான் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வாதி நல்ல நிலைமையில் இருந்ததால் சொத்துக்களில் பங்கு வேண்டாம் என்று கூறினார் என்றால் சரியல்ல. 2009 ம் வருடம் ஆடி மாதம் நானும், வாதி, 1 ம் பிரதிவாதி எனது தாயார் வாய்மொழியாக சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினை அடிப்படையில் தபசில் சொத்துக்கள் 1 ம் பிரதிவாதி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அவர்தான் ஆண்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நானும், எனது அண்ணன் வாதியும் சொத்தில் பங்கு வேண்டாம் என்று கூறிவிட்டு தற்போது 1 ம் பிரதிவாதி கஷ்டம் நஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை கூறி வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் நடைபெற்ற காலத்திலிருந்து தடியாபுரத்தில் இருந்து வருகிறேன் என்றாலும், வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் பயிர் செய்து அனுபவம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் வாதியின் அறிவுரைப்படி போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது எதிர் வழக்குரை ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2015 ல் 1 ம் பிரதிவாதி ஆபிரகாம் வழக்கை சொத்தில் 1 பங்கை 3 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த விவரம் எனக்கும், எனது அண்ணன் வாதிக்கும் அப்போதே தெரியும் என்றால் சரிதான்.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.